# குருனாகல் பிரதேச சபை

## குருனாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 19 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய குருனாகல் பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி குருனாகல் பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் ரூபா 610,462 பெறுமதியான நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 21,366 தொகையும் மக்கள் வங்கியின் ரூபா 2,000,000 பெறுமதியான நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 66,666 தொகையும் ஆக ரூபா 88,032 தொகையான வட்டி வருமானம் அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2 கணக்கு விடயங்களுக்குரிய நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 2,118,142 ஆக இருந்தும் அது ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 2,845,000 தொகையாக ரூபா 726,858 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானத்தின் கீழ் மக்கள் வங்கியின் ரூபா 1,500,000 பெறுமதியான நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 20,625 இனால் குறைத்து வட்டி வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 53,139,228 ஆக இருந்த போதிலும் அது ரூபா 47,742,024 என கணக்கு வைக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 5,397,204 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் தளபாடமும் பொருத்திகளின் பெறுமதி ரூபா 2,900,354 தொயைாக இருந்த போதிலும் அது ஐந்தொகையில் ரூபா 2,839,379 ஆக கணக்கு வைக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் தளபாடமும் பொருத்திகளினதும் பெறுமதி ரூபா 60,975 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய 05 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைத்திருந்த சம்பள மீளளிப்புப் பணமான ரூபா 23,781,913 தொகையானது முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த பெறுமதிசேர் வரி, முத்தரை வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப்பணம் என்பன அந்தந்தக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்தும் மீள அப்பணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்ற போது அதனை ஒவ்வொரு கணக்கிலும் வரவு வைக்கப்படாமல் கூட்டிய பெறுமதியான ரூபா 1,239,227 ஆனது சில்லறை வைப்புக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் உரிய வரிக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டிய பெறுமதியான ரூபா 1.239,227 பிழையான மீதியொன்று எழுந்து காணப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,000,000 பெறுமதியான நிலையான வைப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது நிலையான வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நானாவித வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக நானாவித வைப்புக் கணக்கு மீதி ரூபா 2,000,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2009 ஆம் ஆண்டின் இறுதியில் பெறவேண்டிய சம்பள மீளளிப்புக்கள் ரூபா 696,915 தொகையை மேலதிகமாகக் கணக்கு வைக்கப்பட்டமையை மீளாய்வாண்டில் சரி செய்த போது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு சம்பள மீளளிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 30 இன் ஊடாக நிலுவையாக இருந்த சம்பள மீளளிப்புக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் அக்கணக்குகளின் மீதிகள் ரூபா 696,915 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2009 ஆம் ஆண்டில் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,715,560 சம்பள மீளளிப்பினை மீளாய்வாண்டில் சரிசெய்யும்போது சம்பள மீளளிப்புக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 34 இன் மூலம் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு சம்பள மீளளிப்புக் (சொத்து) கணக்கில் செலவு வைத்தமை மற்றும் நாட்குறிப்பு இலக்கம் 37 இன் மூலம் சம்பள மீளளிப்புக் (சொத்து) கணக்கில் வரவு வைத்து மீண்டெழும் மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மீண்டெழும் மானியம் ரூபா 1,715,560 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2009 ஆம் ஆண்டிற்குரிய 2010 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 4,005,191 தொகையான சம்பள மீளளிப்புப் பணம் நாட்குறிப்பு இலக்கம் 38 இன் மூலம் நிலுவையாக இருந்த சம்பள மீளளிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மீண்டெழும் மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மீண்டெழும் மானியம் ரூபா 4,005,191 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

19 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 139,292,387 ஆக இருந்ததுடன் துணைப்பதிவேடு/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 138,930,641 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

10 கணக்கு விடயங்களுக்குரிய விளக்கமளிக்கப்படாத ரூபா 6,016,164 ஆன மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டுக்கும் மேலாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,966,165 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 35,924,663 கூட்டுமொத்தமான கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிசெய்ய முடியாதிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 13,427,594 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 1,419,560 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

(அ) 5 கணக்கு விடயங்களுக்குரிய மூன்று வருடங்களுக்கு மேலாகக் காணப்படுகின்ற ரூபா 3,124,440 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலமாக தொடர்ந்தும் கொண்டுவரப்படுகின்ற 07 கணக்கு விடயங்களுக்குரியதாகக் காணப்படுகின்ற ரூபா 2,129,960 மீதி மீளாய்வாண்டின் இறுதி வைரயிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் வரையிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,150 கூட்டுப் பெறுமதியான மாற்றப்படாத இரண்டு காசுக் கட்டளையும் 2005 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற வங்கியினால் அறவிடப்பட்ட ரூபா 6,876 ஆன வரவு வரியும் 2003 ஆம் ஆண்டில் விளம்பர அறிவித்தல் பலகைக்காக அறவிடப்பட்ட ரூபா 36,000 கட்டணமும் கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் ரூபா 38,775 பெறுமதியான 04 காசோலைகள் மதிப்பிழந்த காசோலைகளின் கீழ் காணப்பட்டதுடன் இது சம்பந்தமாக உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள படியான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள படியான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | இறைகள் மற்றும் வரிகள் | 1,727 | 1,782 | 2,185 | 1,722 | 1,776 | 256 |
| (ii) | வாடகை | 1,858 | 1,984 | 212 | 2,034 | 2,231 | 48 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,373 | 2,688 | 798 | 2,333 | 2,747 | 938 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 61,069 | 60,337 | 3,952 | 16,785 | 51,134 | 3,949 |
| | மொத்தம் | 67,027 | 66,791 | 7,147 | 22,874 | 57,888 | 5,191 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டுள்ள ரூபா 4,088,176 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 7,328,238 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.4 வியாபார வாடகை

வியாபார வாடகையின் கீழ் 2009 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 12,000 நிலுவை மீதியொன்று காணப்பட்டது. "இந் நிலுவைப் பணத்தில் ரூபா 6,000 நிலுவைக்குரிய வாடகையாளர் தற்போது இப்பிரதேசத்திலிருந்து விலகிச் சென்றமையினால் உரிய நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததாக" 2010 திசெம்பர் 06 ஆந் திகதி தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 2.3.5 ஆதனவரி

சபையின் மீளாய்வாண்டிற்காக ஆதனவரி பட்டியலிடல்கள் ரூபா 1,727,447 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 2,029,614 என வருடாந்த பட்டியலிடல்களுக்கு அண்மித்த பெறுமதியாகக் காணப்பட்டது. அதிலும் வெல்லவ உப அலுவலபத்தின் நிலுவை ரூபா 1,373,262 ஆக இருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் விதிக்கோவையின் 33 தொடக்கம் 41 வரையான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவையை அறவீடு செய்வதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 காணி ஏலவிற்பனை வரி

2007 ஆம் ஆண்டில் காணிகூறுகளாக்கும் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த கவுடாவத்த மெனேரிஹேன என்ற பெயருடைய காணியின் ஏலவிற்பனையாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடவேண்டிய 1% வரித்தொகை ரூபா 48,600 ஆக இருந்தும் சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் அக்காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியின்படி 1% வரித்தொகை ரூபா 40,030 எனக் காட்டப்பட்டமையினால் சபை ரூபா 8,570 வரித்தொகையினைக் குறைத்து அறவிட்டிருந்தது.

### 2.4 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின வகை** | **பாதீடு செய்யப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| **<u>மீண்டெழும் செலவு</u>** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** |
| ஆளணிக்கான வேதனம் | 27,681 | 26,318 | 1,363 | 25,364 | 25,271 | 93 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவைகள் | 27,009 | 26,972 | 37 | 25,490 | 31,198 | (5,708) |
| உப மொத்தம் | 54,690 | 53,290 | 1,400 | 50,854 | 56,469 | (5,615) |
| மூலதனச் செலவு | 92,690 | 92,690 | -- | 82,454 | 66,255 | 16,199 |
| முழு மொத்தம் | 147,380 | 145,980 | 1,400 | 133,308 | 122,724 | 10,584 |

## 2.5 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பான நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 95,000 ஆக இருந்தது.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| புதவினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 24 | 21 |
| ஆரம்ப தரங்கள் | 67 | 63 |
| ஏனைய(நாளாந்த, தற்காலிக) | 22 | 22 |

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.7.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 78,995,728 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட கணக்குகளின் மீதி ரூபா 398,346 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.7.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 77,047 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேறபட்ட காலமாக அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளும் ரூபா 77,047 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.7.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்ற ரூபா 230,000 பெறுமதியான செயற்பாடற்ற 02 கணக்கு மீதிகள் காணப்பட்டன.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1980 இன் 46 ஆம் இலக்க சேவையிலுள்ளவர்களின் பொறுப்பு நிதியச் சபை அதிகாரச்சட்டம் மற்றும் அவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையின் அடிப்படையில் 2010 சனவரி மாத பங்களிப்புப் பணம் தாமதித்துச் செலுத்தப்பட்டமையினால் ரூபா 1,210 தண்டப்பணமாக சேவையிலுள்ளவர்களின் பொறுப்பு நிதியச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட விசேட பயிற்சிக் கருத்தரங்கிற்கு சபையின் மூன்று உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்காக ரூபா 390,000 தொகை 2010 செப்தெம்பர் 27 ஆந் திகதி உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பயிற்சிநெறி நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளப் பெறப்பட்டடிருக்கவில்லை.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பிம்புறுவெல்ல ஹேலவ வீதியினை விஸ்தரிப்பதற்காக காணியினைச் சுவீகரித்தல்

பிம்புறுவெல்ல ஹேலவ வீதியினை விஸ்தரிப்பதற்காக காணியினைச் சுவீகரிப்பதற்கு 2004 ஆம் ஆண்டில் ரூபா 196,200 மாஸ்பொத்த பிரதேச செயலாளரிடம் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் காணி உரிமையாளர்களின் நிர்மாணங்களின் அடிப்படையில் 2008 ஏப்ரல் 01 ஆந் திகதிய பிரதேச செயலாளரினால் விடுவிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் உரிய சுவீகரிப்புச் செய்தல்கள் நிராகரிக்கப்பட்டு 2009 ஏப்ரல் 08 ஆந் திகதிய மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 310,000 இற்கு திரும்ப மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. உரிய நிலுவைப் பணமான ரூபா 113,800 தொகையும் மாஸ்பொத்த பிரதேச செயலாளரிடம் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணி கையளிக்கப்பட்டு வீதி விஸ்தரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ‘‘ஏனைய நிறுவனங்களின் காலதாமதங்கள் இதற்குக் காரணமாக இருந்ததாக’’ தலைவரினால் 2010 திசெம்பர் 06 ஆந் திகதி எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்று உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்குரிய சபையினால் மேற்கூறப்பட்ட நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய முறையில் செலுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய மீதி ரூபா 5,068,344 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைப் பணமாக ரூபா 15,419 படி அந்த நிதியத்தினால் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அறவீடுகள் எந்த ஊழியர்கள் தொடர்பானவை என்பதனை சபை அறிந்து கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2004 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொருள்மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 23,000 பெறுமதியான 19 கேஜ் இரும்புக் கதிரைகள் 100 உம், ரூபா 83,000 ஆன 200 பினாஸ்டிக் கதிரைகளினதும் குறைவுகள் அவதானிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதன் பெறுமதி திணைக்களக் கட்டணங்களுடன்

பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 செயலாற்றல்

2010 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் ரூபா 2,400,000 தொகையான ஏற்பாட்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 08 நலன்புரிச் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.12 ஒப்பந்த நிருவாகம்

2008 ஆம் ஆண்டில் மாகாண குறித்த நன்கொடைகளின் கீழ் ரூபா 1,000,000 ஏற்பாடொன்று குப்பைப் பாத்திரங்கள் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக சபைக்கு கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிரயம் ரூபா 588,600 ஆன 218 குப்பைப் பாத்திரங்கள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. உரிய செயற்திட்டக்காலம் மீளாய்வாண்டு முடிவடைந்தமையினால் எஞ்சிய பணமான ரூபா 411,400 தொகையை சபையினால் பெறமுடியாதிருந்தது.

## 2.13 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்தவேலை நிர்வாகம்
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்